பாம்பன் ஸ்வாமிகள் பாதமலர்கள் போற்றி

# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

ஆகஸ்ட் 2013 ❁ விலை ரூ. 15/-



## வேல்மலை முருகன்

(கணக்கப் பிள்ளை வலசை - திருநெல்வேலி மாவட்டம்)

# புலனடக்கத்தோடு செய்யும் தவம் எழுபிறவிக்கும் உதவும்

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள் வாயிலாக நுகரப்படும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் விஷயங்கள் ஐம்புலன்கள் எனப்படும். ஐம்பொறிகள் யாரையும் கெடுக்கவில்லை. அவற்றின் புலன்வழிச் செல்கின்ற ஆசையே அனைவரையும் கெடுக்கிறது, எனவே புலனடக்கம் என்பதற்கு ஐம்புல ஆசையை அடக்குதல் எனப் பொருள்.

புலனடக்கம் ஏன் தேவை? அவற்றை அடக்காமல் போனால் அவை ஒருவனைத் தீநெறிக்கண் செலுத்தி அழிவுக்கு வழிவகுக்கும், புலனடக்கம் இல்லாதவனிடம் அகப்பகையாகிய அறுவகைக் குற்றங்களும் உண்டாகும். மாணிக்கவாசகர் உலக மக்கள் புலன் வழியே இழுபட்டுத் துன்புறுதலைத் திருவாசகத்தில் நீத்தல் விண்ணப்பத்தில் பல உவமைகள் மூலம் எடுத்துரைத்தார். ஐம்புலன்களின் வழியே இழுபட்டுச் செல்பவர்கட்கு அச்சமும், உடன்விளையும், புலன்களின் ஈர்ப்பு ஒரு பக்கம், அச்சம் ஒரு பக்கம் அவர்களை இழுத்து வருத்தும். "இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு" ஒத்துத் துன்புறுவர். செல்பிடித்த உளுத்த மரத்துண்டின் உள்ளே எறும்புகள் புகுந்திருக்கும். அக்கட்டை இருபக்கமும் தீப்பிடித்தால் எறும்புகள் ஒரு பக்கமும் போக முடியாமலும், குறுக்கே தப்ப முடியாமலும் ஓடித் தவிக்கும். இருபக்கத் தீ அணுக அதனுள் அகப்பட்டு இதற்கும். அதுபோல் மனிதர்கள் புலன்களாகிய ஒருபக்கமும் அப்புலன்கள் வழிச் செல்வதாகிய அச்சம் ஒரு பக்கமும் துன்புறுத்தக் கெடுவர். மேலும் மாணிக்கவாசகர் மனிதர்கள் புலன்வயப்பட்டுத் துன்புறுதலுக்கு ''ஆனைப்போரில் குறுந்தூறு'', "நெய்க்குடத்தை எறும்பு மொய்த்தல்" "எறும்பிடை நாங்கூழ்ப் புழு" போன்ற உவமைகளும் கூறுவர். நாங்கூழ்ப்புழு, எலும்பு இல்லாத மெல்லிய தசைத்திரளாலான உடலுடையது. இது எறும்பின் நடுவில் அகப்பட்டால், எறும்புகள் அதனைச் சல்லடைக் கண்ணாக அரித்துத் தின்றுவிடும். அதுபோல மனிதர்களை ஐம்புலன்களின் ஆசை அரித்து அழித்துவிடும். அவ்வாறு துன்பம் அடையும்படி தன்னை விட்டுவிடாமல் இறைவன் காத்து அருள்புரிய வேண்டும் என மாணிக்கவாசகர் இறைவனிடம் விண்ணப்பிக்கிறார்.

மாணிக்கவாசகரை அடியொற்றிப் பாம்பன் சுவாமிகளும் முருகப் பெருமானை நோக்கி, "நீ திருவருள் செய்வாயேல் இவ்வுலகத்தில் என்னோடு போர் புரியும் இந்திரியங்களாகிய கருவிகள் என்னும் எறும்புகள் மொய்த்து அரிக்க அதனால் வருந்துகின்ற நாங்கூழ்ப் புழுவாக இருக்கும் எளியவன் அறியாமை நீங்கி உன்னுள் கலந்து உய்திபெறும் செல்வமாகிய ''அசி'' பத மோட்சத்தை அடைவேன். கருணைப் பிரானே! நீ அருள்கூர்ந்து அடியேனுக்கு அருள் புரிவாயாக என்று விண்ணப்பிக்கிறார். திருமூலர் செய்யுளை இப்போது காண்போம்.



அஞ்சும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை
அஞ்சும் அடக்கில் அசேதனமாய் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே.

இந்திரியங்கள் ஐந்தையும் அடக்க வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்வார்கள் அறிவில்லாதவர்கள். அவ்வாறு ஐந்தையும் அடக்கி விட்டால் அறிவற்ற சடப்பொருளாகும் என்று கருதி, ஐந்தையும் அடக்காது இயங்கச் செய்கின்ற உபாயத்தை அறிந்து கொண்டேன் என்கின்றார் திருமூலர். அந்த உபாயம் யாது? புலன்களை மடைமாற்றம் (அதாவது பாதையை மாற்றுவது) செய்ய வேண்டும். அதாவது வீணாகப் போகும் ஆற்று நீருக்கு அணை கட்டுவது போல நாம் குளிக்கும் நீர் வீணாகப் போகாது தோட்டத்திலுள்ள மரம் செடிகளுக்குப் பாயுமாறு மடை கட்டுவது போல புலன்களை உலகவழி நோக்கிச் செல்லவிடாது இறைவழி நோக்கித் திருப்ப வேண்டும்.

அருணகிரியாரைத் தம் மானசீக குருவாக ஏற்றுக் கொண்டு இந்த பாரத புண்ணிய பூமியில் அவதரித்த மகான்கள் பலர் இருந்தாலும் முருகன் ஒருவனையே ஏக தெய்வமாக வழிபட்டு, பெறுவதற்கு பாடல் நூல்களான 6666 மகா மந்திரங்களை நாம் ஓதி பயனடைய வேண்டும் என்றும், ஏக தெய்வ வழிபாடு மிகச் சிறந்தது எனவும் கூறிய முனிவர் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் அருளிய முதல் மண்டலத்தில் 27ஆவது


சிவத்தமிழ் குகமணி தே.துனபால்
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526


தலைப்பில் உள்ளூர்ச் சிவசுப்பிரமணியம் சதகம் என்ற பாடலில் 56ஆவது பாடல் இத்தலைப்புக்கு மிகவும் பொருந்தும். இப்பாடலை அன்பர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் சுவாமிகளின் பாடல்கள் பொருள் சிதறாமல் பிரித்துக் கொடுத்த என்மதிப்பிற்குரிய ஆசிரியர் டாக்டர். ப.இராமன் ஐயா அவர்களுக்கு நான் மிகவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். அவ்வாறு பிரித்துக் கொடுத்த பாடல் பின்வருமாறு:

பேராசை இல்லா ஓர் பேராசை கொண்டு உற்ற
பேது எற்றல் எக்காலமோ
பெருமை இல்லாத ஒரு பெருமை கொண்டு அறிவு அற்ற
பெருமை விடல் எக்காலமோ
போராடும் அறுவரைப் போர் ஆடி வென்று அரிய
புகழ் பெறுவது எக்காலமோ
பொறி மயங்காமல் ஐம்பொறியையும் ஒடுக்கி உள்
போக்கு அறிவது எக்காலமோ

வாராத கம்பலைகள் வரினும் என் மனம் நனி
மகிழ்ந்து உய்வது எக்காலமோ
வாய்த்த சன்மம் பழுதுபடுமோ எனத் தினம்
மயங்கும் என் முன்பு வந்து
சீர் ஆரும் நிசம் ஓத அருள் நிறுவி ஆள் ஆரோ
தித்திக்கும் முத்தி முதலே
தெள்அறிவு எனும் சலதி பொங்கும் உள்ஊரில் வளர்
சிவசுப்பிரமணிய தேவே.

"இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் எனும் அறிவிருக்குந் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! மண், பெண், பொன் என்பவற்றில் பேராசை வையாமல், உன்னை அடைய வேண்டுமெனும் பேராசை கொண்டு என் அறியாமையை ஒழிப்பது எக்காலமோ? உலகப் புகழ், செல்வம் போன்ற பெருமையில்லாமல் உன் அடியார் என்னும் பெருமை பெற்று, நிலையில்லாப் புகழ், செல்வம், பதவி போன்ற வீண் மோகம், மதம், மாச்சரியம் என்னும் என்னுடன் போராடும் ஆறு பகைவரைப் போராடி வென்று அடைதற்கரிதான புகழை அடைதல் எக்காலமோ? அறிவு மயங்காமல் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும் அடக்கி மனத்தின் செயலை அறிவது எக்காலமோ? வரக்கூடாத துன்பங்கள் வரினும் என் மனம் மகிழ்ந்து வாழ்வது எக்காலமோ? இப்பொழுது வாய்த்துள்ள பிறப்பு பழுதுபடுமோ என்று தினம் மயங்கும் என் முன்னே வந்து, சிறப்புமிக்க உண்மையை உரைக்க அருள் செய்து அடிமை கொண்டருள்வாயாக!" என்று வேண்டுகிறார். (இதில் உள்ள 100 பாடல்களை நீங்கள் கேட்க வேண்டுமென்றால் www.pambanswamigal.org என்ற இணைய தளத்தில் சென்று கேட்டு மகிழலாம்).

ஐம்புல ஆசை உயிர்களை ஆழ்குழியில் தள்ளும், பூமியில் உள்ள குழியில் விழுந்தவர்களைக் கரையிலுள்ளவர்கள் தானே கை கொடுத்துக் கரையேற்ற முடியும்? அதுபோல புலன் வயப்பட்டுத் துன்புறும் உயிர்களைப் பொறிவாயில் ஐந்தவித்த இறைவன் தான் உய்தி பெறச் செய்ய முடியும்.

மேலும் சுவாமிகள் பரஞ்சுடர்க்கண்ணியில் "இந்திரியப் பேய்கள் எனைத் தொந்தரிக்காமல் சந்ததமும் நன்னாட்டம் தாராய் பரஞ்சுடரே" என இந்திரியப் பேய்கள் தன்னைத் தொந்தரவு செய்யாதிருக்க எப்போதும் முருகப் பெருமானையே நினையும்படி அருள்தரப் பிரார்த்திக்கின்றார்.

பாம்பன் சுவாமிகள், ''ஐம்புலன்களையும் வென்றவர்கள் மோனம் எனும் ஞானத்தினை எய்தி இன்புறுகின்றனர். ஐம்புலன்களை வெல்லாத யானோ மோகத்தில் இவ்வுலக வாழ்வில் திகைக்கிறேன். ஈன்ற நின் அருள் என் பக்கம் ஆகுநாள் எந்த நாள் கருணாகர வேலனே" என்று முருகனை வேண்டுகிறார்.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் மெய்யுணர்தல் என்ற தலைப்பில் 35ஆவது குறளில் ஐம்புலன்களையும் அடக்கித் தன்வசப் படுத்தியவர்க்கும், மெய்யுணர்வு இல்லையென்றால் அதனால் பயனில்லை என்கிறார். 'ஐயுணர்வு எய்திய கண்ணும் பயமின்றே மெய்யுணர்வு இல்லாதவர்க்கு.' மேலும் திருவள்ளுவர் 126ஆம் குறளில் 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப்பு உடைத்து.' என்று குறிப்பிட்டுள்ளார். எவ்வளவுதான் படித்தாலும் எவ்வளவுதான் கேட்டாலும், சத்துவகுணம் பொருந்தி புலன்களை அடக்கியிருத்தல் அரிதாகும். இந்தச் சித்தி பெற்றவர்களுக்கு வலிமை வாய்ந்த ஆணவமலமும் அதன் காரணமாகக் கூடிய கன்மம், மாயை என்று இரு மலங்களும் தேயும். அத்தகையோரைத் தொழலாம். புலனடக்கம் கடினம் என்றும், புலனடக்கத்தைப் பெற்றவர்கள் அடையும் மேம்பாட்டையும் பாம்பன் சுவாமிகள் உணர்த்துகின்றார்.

குரு பாம்பன் சுவாமிகள் அருளிய சதாசிவக் கண்ணியில் "ஐந்தும் அறிந்திடினும் ஐந்தும் அடங்கிடினும் சிந்தை நிற்க நிற்றல் அன்றோ திட்டம் சதாசிவமே" ஆமை தன் உறுப்புகளை உள்ளே இழுப்பதுபோல ஒருவன் ஒரு பிறப்பில் ஐம்பொறிகளையும் அடக்குவான் எனில் அஃது அவனை ஏழு பிறவிகளிலும் தீமையிலிருந்து பாதுகாக்கும்.

இக்கட்டுரையிலிருந்து நாம் அறிவது என்ன?

நாம் ஐம்புலன்களை அடக்கும் முறையை நன்கு கற்றுக் கொள்ள வேண்டும். ஒருவனுக்கு அவனுடைய வாழ்வுக்கு பொன், பொருள், கல்வி எவ்வளவு அவசியமோ, அந்த அளவுக்கு ஐம்புலன் அடக்கும் முறையைக் கற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு முதல் படிக்கட்டு – போதும் என்கின்ற மனம். நம் உணவில் இனிப்பு போதும் என்று நிறுத்திக் கொண்டால் சர்க்கரை வியாதியும் குறையும். நமக்கு ஏற்றவாறு நல்ல ஞானிகளின் பாடல்களைக் கேட்டால், நமக்குள் இருக்கும் ஆசை ஓரளவு குறையும். ஆசை குறையும் போது துன்பம் குறையும். துன்பம் குறையும் போது மனம் அடங்கும். மனம் அடங்கும் போது ஐம்புலன்களும் அறிவுக்குக் கட்டுப்பட்டு செயல்படும். இந்த அறிவு பெறுவதற்கு ஞானிகளின் பாடல்களைக் கேட்டு அதன்படி வழிநடக்க வேண்டும் என்ற உறுதி மொழி மிகவும் அவசியம் என்பது கட்டுரையாளரின் கருத்தாகும்.


## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**